**கவனிக்க.-** *24.01.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி (IV) (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அංක 1848 - 2014 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2014.01.31

*1848 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 116 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 126 |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன :-

1. (அ) **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(1) ***வானூர்தி பொறியியல் :***

*(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்)*
*(ஆ) வானூர்தி இயந்திரவியலாளர் (ஆண்)*
*(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும், அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள்.*

(2) ***பொது பொறியியல் :***

*(அ) ஆயுத இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஆ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (ஆண்)*
*(இ) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர் (ஆண்)*
*(ஈ) மேற்பரப்பு தொழினுட்ப உதவியாளர் (ஆண்)*
*(உ) பொது இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஊ) உலோக தகடு இயந்திரவியலாளர் (ஆண்)*
*(எ) மரக்கலை இயந்திரவியலாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.*

(3) ***மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல் :***

*(அ) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)*
*(ஆ) வான் தொலைத்தொடர்பாளர் (ஆண்)*
*(இ) தொலைபேசி இயக்குனர் (ஆண்)*
*(ஈ) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(4) ***வைத்திய துறை :***

*(அ) தாதி உதவியாளர் (ஆண்/பெண்)*
*(ஆ) பல் வைத்திய உதவியாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும் ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞான பிரிவில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சிநெறியினைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(5) ***உபகரணத் துறை :***

*(அ) வழங்குனர் உதவியாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.*

*(ஆ) உணவக மேற்பார்வையாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள்.*

(6) ***பரிபாலன துறை :***

*(அ) பரிபாலன உதவியாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/விஞ்ஞானம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(ஆ) கணக்கியல் உதவியாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.

(7) ***தொழிற்பாடுகள் துறை :***

(அ) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள்.

(அ) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண்/பெண்)
(ஆ) நாய்களைக் கையாள்பவர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள்.

(8) ***பொலிஸ் துறை :***

பொலிஸ் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். உயரம் : ஆண் - 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண் - 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முதலிடம் வழங்கப்படும்.

(9) ***இசைக் கலைஞர் துறை (ஆண்) :***

இசைக் கலைஞர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) ஆறு (6) பாடங்களில் சித்திகள். சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும்.

***2. ஏனைய தகைமைகள்.***- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) வயது.- ஆண் : 31.07.2014 ஆந் திகதியன்று 18-23 வயதுக்கு இடைப்பட்டு இருத்தல் வேண்டும்.

பெண் : 31.07.2014 ஆந் திகதியன்று 18-22 வயதுக்கு இடைப்பட்டு இருத்தல் வேண்டும்.

(இ) உயரம்.- ஆண் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ;
பெண் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்

(ஈ) உடல் நிறை.- ஆண் : 17< உடற்பருமன் சுட்டி (BMI) <26
பெண் : 17< உடற்பருமன் சுட்டி (BMI) <25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)-} \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{(M)}}$$

(உ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஊ) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(எ) குடியியல் நிலை.- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதுடன் தொழிற்பயிற்சியை பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 01, 02 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள்.**- (அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்/வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

**5. தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள்

சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக எட்டு (8) ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவை யாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| விமான வீரன்- | : | ரூபா 1,73,100-6 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 |
| முன்னணி விமான வீரன் | : | ரூபா 1,78,320-4 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 |
| கோப்ரல் | : | ரூபா 1,83,540-10 x 2,040 - 9 x -2,880 = ரூபா 2,29,860 |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,87,620-3 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,99,500-1 x 2,040 - 9 x 2,880 -3 x 3,840 -= ரூபா 2,31,180 |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,99,500-7 x 2,880 - 14 x 3,840 = ரூபா 2,73,420 |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,23,500-13 x 3,840 = ரூபா 2,73,420 |

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகள் சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

8. **வேறு கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 6,600 ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப்படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) விசேட கொடுப்பனவு.- 2013, மே மாத அடிப்படை சம்பளத்தில் 15% மற்றும் ரூபா 375 ;

(6) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(7) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 12,758.40 (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(8) சீருடைக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப் படும் ;

(9) மேலதிக கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 1,000 வழங்கப் படும் ;

(10) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(11) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(12) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(13) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(14) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 513.50 வரை வழங்கப்படும் ;

(15) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(16) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர் களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(17) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேருந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(18) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(19) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(20) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(21) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2014, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை தொழிற்றுறை பயிற்சிப் பாடசாலை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை விமானப்படை, தொழிற்றுறை பயிற்சிப் பாடசாலையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்பப்படுதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

12. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................... பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

7. மாவட்டம் :----.

8. தேர்தல் தொகுதி :----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

13. பால் :----.

14. உயரம் : அடி ---- அங்குலம் ----.

15. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

17. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

18. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

19. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

20. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

21. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

22. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

23. **விண்ணப்பதாரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப் படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கை குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

1-904

---

**இலங்கை வான்படை**

அரசாணையமர்வுஅலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ஆண்/பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

(அ) விமானத்தள நிர்மாணப் பிரிவு
(இ) வைத்தியப் பிரிவு
(இ) பல் வைத்தியப் பிரிவு

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் விண்ணப்ப தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) ***விமானத்தள நிர்மாணப் பிரிவு :***

*திரவிய பொறியியல் அலுவலர் (தார் இயந்திரம்) - ஆண் (நிரந்தர/தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சிவில்/இயந்திர BSc பட்டம் அல்லது திரவிய பொறியியல் BSc பட்டம் மற்றும் பெருந்தெருக்கள் விமான ஓடு தள நிர்மாணிப்பில் பயன்படும்

இயந்திரம் தொடர்பாக மற்றும் செப்பமிடுதல் தொடர்பாக கலவை செய்யும் இயந்திரம் தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு (1) வருட அனுபவம் இருத்தல் வேண்டும். பெருந் தெருக்கள் விமான ஓடுதள நிருமாணத்திற்கான கலவை தயாரிப்பில் உட்படுத்தப்படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

* திரவிய பொறியியலில் BSc பட்டம் மற்றும் பெருந்தெருக்கள் விமான ஓடுதள நிருமாணிப்பில் பயன்படும் இயந்திரம் தொடர்பாக, மற்றும் செப்பமிடுதல் தொடர்பாக, கலவை செய்யும் இயந்திரம் தொடர்பாக குறைந்தபட்சம் இரண்டு (2) வருட அனுபவம் இருத்தல் வேண்டும். பெருந்தெருக்கள் விமான ஓடுதள நிருமாணத்தின் கலவை தயாரிப்பில் உட்படுத்தப்படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

* ப்ளையிங் ஒபீசர்.- சிவில் பொறியியலில் NDT/NDES/ HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் பெருந்தெருக்கள் விமான ஓடுதள நிருமாணத்தின் கலவை தயாரிப்பில் உட்படுத்தப்படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

*கட்டிட கலை பொறியியல் அலுவலர் - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :*

* தற்காலிக ஸ்கொட்ரன் லீடர்.- சிவில்/ இயந்திரவியல்/ மின்னியல்/ பொறியியலில் பட்டம் (கட்டிடக் கலை பொறி யியலில்) MSc பட்டம் வளிசீராக்கிகள், நீர் விநியோகம், மருத்துவ வசதி, பொது மக்கள் சுகாதாரம், தீயணைப்பு வசதி, மின்சார விநியோகம் போன்றவற்றில் புதிய தொழில்நுட்பத்தை பிரயோகித்தல் போன்றவற்றில் BSc பட்டத்துடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் 2 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரர்களுக்கு இலங்கை வான்படையில் தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் (Temporary Squadron Leader) நிலையியல் அலுவலராக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

*சிவில்/மின்னியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சிவில்/மின்னியல் பொறியியலில் BSc பட்டத்துடன் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.

* பயிளட் ஒபீசர்.- சிவில்/மின்னியல் பொறியியலில் NDT/ NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

* பயிளட் ஒபீசர்.- சிவில்/மின்னியல் பொறியியலில் NDT/ NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இல்லாத விண்ணப்பதாரிகள் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

*நிலஅளவையாளர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- மொரட்டுவை பல்கலைக்கழத்தில் வழங்கப்படும் BSc in (QS) பட்டம் அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் Graduate Member) உறுப்பினராக இருத்தல் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) உறுப்பினராகவிருப்பதுடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் மூன்று (03) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

* ப்ளையிங் ஒபீசர்.- இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) ஆகவிருப்பதுடன் இரத்மலானை நிலஅளவையாளர் UNIVOTEC அமைப்பில் டிப்ளோமா முடிதிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

*அளவையாளர் - ஆண் (நிரந்தர/தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் பெற்ற அளவையாளர் BSc பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

* ப்ளையிங் ஒபீசர்.- தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ***வைத்தியப் பிரிவு :***

*வைத்திய அதிகாரி - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)*

* ப்ளைட் லெப்டினன்ட்- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்தி ருத்தல் வேண்டும்.

பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர்- ஆண்/பெண் (நிரந்தர)

* MBBS பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் 5 ஆண்டு சேவைக் காலத்திற்குள் ERPM பரீட்சை யில் சித்திபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் ஐந்து வருட (5) சேவைக்குப் பின் நிறுத்தப்படுவார்கள்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளையிங் ஒபீசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தியடைந்துஇலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் ப்ளைட் லெப்டினன்ட் தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்திற்கொள்ளப்படும்.

(இ) ***பல் வைத்தியப் பிரிவு :***

*பல் அறுவை மருத்துவர்- ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)*

* ப்ளைட் லெப்டினன்ட்- BDS அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண் / பெண் (தொண்டர்)

* BDS அல்லது இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு தொண்டர் சேவைக்காலத்திற்கு ERPM பரீட்சையில் சித்திபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்ப தாரிகள் ஐந்து (5) வருட சேவைக்குப்பின் நிறுத்தப்படு வார்கள்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளையின் ஒபீசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் ப்ளைட் லெப்டினன்ட் தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்திற்கொள்ளப்படும்.

பல் மருத்துவ மாணவர்-ஆண்/பெண் (நிரந்தர)

* பைலட் ஒபிசர்.- BDS 2 ஆவது பகுதியை முடிவுசெய்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

* ப்ளையின் ஒபிசர்.- இறுதி BDS முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் BDS பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு** :

(1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக் கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடியும்வரை வான் படையிலிருந்து விடுவிக்கப் படுவார்கள். பல் வைத்திய BDS பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் பதிவாகியதும் அவர்கள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப்படுவார்கள்.

(3) கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

(4) பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடத்தை காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கவும்.

3. **வேறு தகைமைகள்** :

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்

(இ) பால்.- ஆண்/பெண் (தேவையைப் பொருத்து)

(ஈ) வயது.- 2014, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு -

(1) ***விமானத்தள நிர்மாணப் பிரிவு, வைத்திய, பல் வைத்தியம் மற்றும் (பயற்சிபெறும்** Pre-Intern வைத்தி, பல் வைத்திய) போன்ற பிரிவுகளில் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-35 வயதுக்கு கூடா திருத்தல் வேண்டும்.*

(2) பல் வைத்தியப் பிரிவு (பல் வைத்திய மாணவன்) போன்ற பிரிவுகளில் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-30 வயதுக்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(உ) உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

(ஊ) நிறை.- இலங்கை விமானப்படை உடற்பருமன் சுட்டிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(ஊ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது)

(எ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஏ) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவ தற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆகப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்துப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் நிலைகளில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினன்ட்/ஸ்குவார்டன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஆளுநரி னால் தீர்மானிக்கப்படும் இடங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

*10.* வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

*11.* இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டார். வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

*12.* அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

*13.* திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

*14.* திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (உ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

*15.* (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ஃபிளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன் | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - ரூபா 3,13,920-2 x 7,740- ரூபா 3,29,400 |
| தரம் II | - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட தரம் | - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பல் வைத்திய | - ரூபா 3,13,920-2 x 7,740- ரூபா 3,29,400 |
| தரம் II | - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட தரம் | - ரூபா 5,08,680-12 x 17,720 = ரூபா 6,97,320 |

(ஈ) வைத்திய, பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் II | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் I | - ரூபா 3,400 மாதமொன்றுக்கு |
| விசேட தரம் | - ரூபா 3,400 மாதமொன்றுக்கு |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - ரூபா 2,125 மாதமொன்றுக்கு |
| தரம் II | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் I | - ரூபா 400 மாதமொன்றுக்கு |

(3) மேலதிக வேலை கொடுப்பனவு - ரூபா 25,000 மாதமொன்றுக்கு

(4) மேலதிக வேலைப்படி :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - ரூபா 335 (மணித்தியாலத்திற்கு) |
| தரம் II | - ரூபா 383 (மணித்தியாலத்திற்கு) |
| தரம் I | - ரூபா 528 (மணித்தியாலத்திற்கு) |
| விசேட பிரிவு | - ரூபா 628 (மணித்தியாலத்திற்கு) |

(5) (15) (ஈ) காணப்படும் சேவை கொடுப்பனவுகள் கீழ்க்காணப்படும் முறைக்கமைய வழங்கப்படும் :

(ஈ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 6,600 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250வீதம் வழங்கப்படும் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிக கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255);

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 14,449.80 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடிய ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படைப் படியில் 20 சதவீதம் விசேட கொடுப்பனவாக தரப்படும் ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டண செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும் ;

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுப்படற்பாலனவாகும் ;

(18) சேவை கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500 (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து) ;

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்) ;

(20) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு அடிப்படைச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும் (பல் வைத்தியருக்கு மாத்திரம்) ;

(21) மேலதிக சேவைக் கொடுப்பனவு 120 மணித்தியாலத்திற்கு (கூடியது) மாதத்திற்கு - (வைத்திய-பல் வைத்திய).

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுவதுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 10, பெப்புருவரி 2014 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் ........................ பிரிவு" எனக் குறிப்பிப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்பப்படுதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் கொண்டிருத்தலும் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள், சாரணர் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பக்காரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை அதிகாரியின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும் :-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டா.

(எச். டி. அபேவிக்ரம),
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

*இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ................. பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவி*

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவுமுறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) : ----.

2. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

8. அஞ்சல் முகவரி :----.

9. இணையதள முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் இலக்கம் :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில் தகைமைகள் வேறு | | |

18. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

24. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

1-905

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழியங்கும் பூங்காக்களில் வெற்றிடமாக உள்ள பூங்கா வேலை மேற்பார்வையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழியங்கும் பூங்காக்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சார்ந்த பிரிவு 3 இற்குரிய பூங்கா வேலை மேற்பார்வையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. சேவை நிபந்தனைகள்.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கிணங்க சேவைப் பிரிவின் III ஆம் வகுப்புக்கு இணைத்துக்கொள்ளப்படுவர் :-

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது.

(ii) நியமனம் பெற்ற திகதியிலிருந்து 03 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது.

(iii) தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு, அரச கரும மொழிக் கொள்கை, தாபனவிதிக் கோவை, நிதிச் சட்டங்கள், திணைக்களக் கட்டளைகள், ஏனைய அரசாங்க சுற்று நிருபங்கள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட முடியுமான திருத்தங்கள் உள்ளிட்ட சட்ட திட்டங்களுக்கும் யாப்புக்களுக்கும் மற்றும் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டுக் காரியமாற்ற வேண்டும்.

(iv) III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் 03 வருடங்களுக்குள் 1 ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) அவ்வாறே, 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி இரண்டாவது அரச கரும மொழியிலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

**3. சம்பளப் பிரிவும் அளவும் :**

(i) சம்பளப் பிரிவு - MT - 1 - 2006 A
(ii) சம்பள அளவு - ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665.
(06/2006 (iv) ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி)

**4. தகைமைகள் :**

4.1 (i) கல்வித் தகைமைகள்.- க.பொ.த. சா.த. பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் உட்பட வேறு பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) தொழில் தகைமைகள்.- இப்பதவிக்கான பொறுப்புக்கள் மற்றும் கடமைகளுடன் தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் (NVQ) ஐந்துக்கு (05) சமமான அல்லது அதனை விட உயர் மட்டத்திலான விவசாய/ பூங்கா அலங்காரவியல்/ பூச்செடிச்செய்கை அல்லது நாற்று மேடை முகாமை தொடர்பில் தாவரவியல் பூங்காக்கள் பிரிவில் தொழில் நுட்பக் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) அனுபவம்.- இத்துறையில் பெற்றுள்ள அனுபவம் விசேட தகுதியாகக் கணிக்கப்படும்.

*4.2 வேறு தகைமைகள்.-* (i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாயிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(iii) பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு அவசியமான மேலே இலக்கங்கள் 04.1 (i), 04.1 (ii) ஆகியவற்றில் குறிப்பிடப் பட்டிருக்கும் தகைமைகளை இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விண்ணப்பம் கோரல் முடிவுத் திகதிக்கு சகல வகைகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டியதுடன் அரசாங்க வைத்தியப் பரிசோதனையொன்றில் சித்தியடையவும் வேண்டும்.

(v) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர அரச சேவையில் இருக்கும் அலுவலர்களைப் பொறுத்தவரையில் இவ்வய தெல்லை ஏற்புடயதன்று.)

5. **விண்ணப்பிக்கும் ஒழுங்கு.**- இவ்விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 (8 1/2" X 12") அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படி வங்களை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, "பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த. பெ. இல. 14, பேராதனை" என்ற முகவரிக்கு 2014, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

*6.* ***பரீட்சைக் கட்டணம்.***- விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர், எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும், பேராதனை இலங்கை வங்கியில் உள்ள தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தின் 0007040743 என்ற இலக்கம் கொண்ட கணக்கிற்கு ரூ. 400 ஐச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். (அதன் நிழற்பிரதியொன்றை தங்களிடம் வைத்துக் கொள்ளல் வேண்டும்)

7. **தெரிவுசெய்யும் ஒழுங்கு முறை.**- எழுத்துப் பரீட்சையொன்றின் மூலமும் முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும்.

*7.1 எழுத்துப் பரீட்சை.-* (i) பொது அறிவு, விவேகம் மற்றும் துறை சார்ந்த அறிவை மட்டிடுவதற்கான இணைந்த வினாப்பத்திரமொன்று.

இப்பரீட்சையானது, தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தால் நடாத்தப்படும். அதிக புள்ளிகளைப் பெற்று போட்டிப் பரீட்சையில் சித்தியடைவோரிலிருந்து வெற்றிடம் நிலவும் எண்ணிக்கையைவிட இரட்டிப்பு எண்ணிக்கை கொண்ட விண்ணப்ப தாரிகள் முறையான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*பரீட்சை மொழி.-* இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

*8.* ***பாட விதானம்.***- பொது அறிவு /விவேகம் மற்றும் அலங்காரப் பூங்காவியல்/அடிப்படை பூங்காவியல்/பூக்கள் மற்றும் அலங்காரத் தாவர வளர்ப்பு /தாவர இனப்பெருக்கம் மற்றும் பூங்கா முகாமை.

*9.* ***அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை.***- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தால் நடாத்தப்படும். விண்ணப்பதாரியின் மேலதிக கல்வித் தகைமைகள், மேலதிக தொழில் தகைமைகள், மொழித் தேர்ச்சி, அனுபவம் மற்றும் நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் ஆகியவற்றுக்கு உச்சபட்சமாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.

கலாநிதி டீ. எஸ். ஏ. விஜேசுந்தர,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.
2014, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

*தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பதவிகளில் ஒன்றான பூங்கா வேலை மேற்பார்வையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை*

☐
(அலுவலகப் பாவனைக்கு)

1. பரீட்சை மொழி மூலம் :
சிங்களம் - 01
தமிழ் - 02 ☐
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): திரு/திருமதி/செல்வி :----.

3. முழுப்பெயர் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

7. 7.1 பிறந்த திகதி :----.

7.2 விண்ணப்பப்படிவங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. ஆண்/பெண் :

0 - பெண் 1 - ஆண் ☐

9. திருமணமானவரா ?

1 - திருமணமானவர், 2 – திருமணமாகாதவர் ☐

10. இனம் :
(சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5 ) ☐

11. தொலைபேசி இலக்கம் :----.

12. தகைமைகள் :

12.1 கல்வித் தகைமைகள்.- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விபரங்கள் :

* பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மொழிமூலமும் : ----.
* பரீட்சை இலக்கம் :----.
* பரீட்சைப் பெறுபேறு :

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12.2 தொழில் தகைமைகள் :

* பெற்றுக்கொண்டுள்ள தொழில் தகைமைகள் :----.
* அதனைப் பூர்த்தி செய்த திகதி:----.
* உரிய நிறுவனம்:----.

12.3 வேறு தகைமைகள் :----.

13. அனுபவம் :----.

14. நீர் ஏதும் குற்றமொன்றுக்கு நீதிமன்றமொன்றால் தண்டனை விதிகப்பட்டுள்ளீரா? (இருப்பின் குறிப்பிடுக) :----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை ஒழுங்காக இங்கே ஒட்டவும்.<br>நிழற்படப் பிரதியை தங்களுடன் வைத்துக்கொள்ளவும். |

16. **விண்ணப்பதாரியின் பிரகடனம் :**

இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையுமாகும் எனப் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும், நான் அரச சேவைப் பதவியொன்றிலிருந்து நீக்கப்பட்ட அல்லது பதவியை விட்டுச்சென்ற ஒரு நபரல்ல என்றும் பிரகடனப்படுத்து கின்றேன். இப்பரீட்சை தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவும் பரீட்சை சட்டதிட்டங் களுக்கு அமைய நான் தகுதியற்றவன் எனத் தெரியவந்தால் பரீட்சையை நடாத்த முன்னர், பரீட்சை நடைபெறும்போது, அல்லது அதன் பின்னர் எனது, பரீட்சைக்குத் தோற்றும் உரிமையை நீக்க எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் கட்டுப்பட்டு நடக்க நான் இணங்குகின்றேன். மேலும், தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுவதோடு, இப்பதவிக்கான நியமனம் மற்றும் சேவை நிலையம் தொடர்பில் சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் அப்பணிப்பாளர் நாயகத்துக்கே உண்டு எனவும் ஏற்றுக் கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

17. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் :

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ......................... தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில் ............................... ஆக நிரந்தர/தற்காலிக அலுவலராக பணிபுரிகின்றார் எனவும் அவர் இந்நியமனத்திற்கான கடமைகளை நிறைவேற்றத் தகைமை உடையவர்/அற்றவர் எனவும் தெரிவிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த அமைச்சில்/திணைக்களத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

1-906

---

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத் தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சை தொடர்பில் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகக் கடமைப் பட்டவராவர்.

2. விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட் டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள

பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2014.02.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்னை, மஹரகமை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014" என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கட்டணமும் இல்லை. அதன் பின் தோற்றுவதாயின் ரூபா 200 பெறுமதியான முத்திரையும் ஒரு பாடத்துக்கு தோற்றுவதாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரையையும் ஒட்டி அதன் மீது கையொப்பமும் திகதியும் இட்டு அந்த முத்திரையை பாவனை யற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மஹரகம" என்னும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் உடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;

(iv) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் பெயரும் பதிவு இலக்கமும் திகதியும்.

5. **பரீட்சைத் திட்டம்** *(இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்றவாறு) :*

(I) *நிதிப்பிரமாணங்கள்.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் தொகுதி I (10 ஆம் அத்தியாயம் தவிர)

(II) *தாபனவிதிக்கோவை.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள் ; அத்துடன்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி II இன் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) *மருத்துவமனை நிருவாகம்.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) மருத்துவமனை தொடர்பிலுள்ள பொதுவான விதிகளும் ஒழுங்குவிதிகளும் ;

(ii) மருத்துவமனையைச் சுத்தமாக வைத்திருத்தல் ;

(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(iv) நோயாளிக்கான பொருத்தமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள் ;

(v) மருந்து உற்பத்தி நிலைய நிருவாகம் ;

(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(vii) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் கனிஷ்ட ஊழியர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு ;

(viii) மருத்துவமனை தொடர்பில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் ;

(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக ஒழுங்குவிதிகள் ;

(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் ;

(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை

(IV) *அரச கரும மொழி வாய்மொழிப் பரீட்சை.- சிங்களம்/தமிழ் (15 நிமிடங்கள்) :*

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல் ;

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல் ;

(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல் ;
(ஆ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல் ;
(இ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெறவேண்டும்.

பீ. எஸ். கே. ஆர். வீரக்கோன்,
ஆயுர்வேத ஆணையாளர்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்னை,
மஹரகமை,
2014, சனவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2014

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - S
தமிழ் - T
(பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) Mr./Mrs./Miss :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : திரு./திருமதி/செல்வி :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (i) கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(ii) கடமை நிலையத்துக்குரிய மாகாணம் :----.

7. (i) கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ii) தொலைபேசி இலக்கம் :----.

8. (i) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றி பின்வரும் பாடத்திலோ அல்லது பாடங்களிலோ சித்தியடைந்துள்ளீரா ? :----.

நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ மருத்துவமனை நிருவாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்) அவ்வாறாயின் பரீட்சை சுட்டெண்ணையும் திகதியையும் குறிப்பிடுக.

| பாடம் | சுட்டெண் | வருடம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா ? :----.

பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதவிடத்து ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரைக்கூடு

முழுப்பரீட்சைக்காக 200 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக முத்திரையை ஒட்டக்கூடாது.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு எனவும் சான்று பகர்கின்றேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ரூபா ............................................ பெறுமதியான முத்திரை/ முத்திரைகள் செல்லுபடியானவை எனவும் முன்னர் உபயோகிக்கப்படாதவை எனவும் நான் உறுதிமொழியளிக்கின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகார மளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ............................................................ எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் இவர் தெரிந்தவர் என்றும் ............................................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*1-928*

---

**கல்வி அமைச்சு**

*ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றை பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2014*

தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன் தொழிற்பயிற்சி ஒன்றைப் பயிலுவதற்குத் தேவையான கல்வித்தகைமைகளையும் தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகுதி**.- சகல விண்ணப்பதாரிகளும்-

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2.2 சிறந்த ஒழுக்கமும் உறுதியான உடல், உளநலமும் உடையவராக இருக்க வேண்டும்.
2.3 வயது:
2.3.1 2014.01.01 ஆந் திகதியன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
2.3.2 பௌத்த மதநெறிக்கு விண்ணப்பிக்கும் புத்த சமய மதகுருமார்கள்/பிக்குணிகள் 2014.01.01 ஆந் திகதியன்று 27 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
2.3.3 கத்தோலிக்க/ கிறிஸ்தவ நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மதகுருமாருக்கான வயதெல்லை 2014.01.01 ஆந் திகதியன்று 30 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

2.4 விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3. **அடிப்படை கல்வித் தகைமைகள் :**

3.1 2012 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்காக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் இரண்டு பாடங்களில்) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(தொழில்நுட்பக் கற்கை-கலையும் கைப்பணியும் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்போர் 4.23 பகுதியில் கவனிக்க வேண்டியன என்ற அம்சத்தையும் வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்போர் 4.24 பகுதியில் கவனிக்க வேண்டியன என்ற அம்சத்தையும் கத்தோலிக்க திருமறை/ கிறிஸ்தவ பயிற்சி நெறி மதகுருமார் 4.8 பகுதியில் கவனிக்கவேண்டியன எனும் அம்சத்தையும் வாசிக்கவும்).

3.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் /ஆரம்பப் பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட பிரதான ஆறு (6) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (3) திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (முதலாவது தடவையில் குறைந்தபட்சம் பிரதான ஐந்து (05) பாடங்களிலேனும் சித்தியடைந்திருக்க வேண்டும்.)

*பிரதான பாடங்கள்*.- (i) சமயம், (ii) முதலாம் மொழி, (iii) ஆங்கிலம், (iv) கணிதம், (v) வரலாறு, (vi) விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், (vii) அழகிற்கலை (சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் இலக்கியம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு), (viii) தொழில்நுட்பப் பாடம் (விவசாயம், வணிகக் கல்வியும் கணக்கீடும், நெசவுக் கைத்தொழில்) அல்லது 2008 ஆம் ஆண்டு க. பொ. த. (சாதாரண) புதிய பாடத்திட்ட விண்ணப்பதாரிகள் முதலாவது மற்றும் மூன்றாவது தொகுதி பாடங்களில் ஏதாவது ஒரு பாடம்.

*அடிப்படைப் பிரிவேனா பரீட்சையில் கட்டாய பாடங்கள்*.- (i) சிங்களம், (ii) பாலி, (iii) சமஸ்கிருதம், (iv) ஆங்கிலம், (v) கணிதம், (vi) திரிபீடகம்.

*3.3 அவ்வப்பாடநெறிகளுக்குரிய க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் விசேட தகைமைகள் மேற்கூறப்பட்ட 3.2 இற்கமைய இரு அமர்வுகளிலும் பூரணப்படுத்தாதுவிட்டால் மூன்றாவது அமர்விலே பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். (விசேட தகைமை தொடர்பாக கருத்திற்கொள்ளப்படுவது 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ஆகும்.) விசேட தகைமை தொடர்பாக விசேடமாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரிசீலிக்கப்படும்.*

*3.4 ஆங்கில மொழிப் பாடநெறி மற்றும் ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்கான ஆங்கில மொழித் தேர்ச்சி :*

*3.4.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (C)/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.*

*3.4.2 ஆங்கில மொழிப் பாடநெறிக்காக விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியை ஒரு பாடமாகத் தோற்றி சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருப்பது போதுமானது. இது எவ்வாறாக இருப்பினும் திறமைகளைப் பரிசீலனை செய்யும் பரீட்சையில் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பல விண்ணப்பதாரர்களிடையே ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டியேற்படும்போது உரிய விண்ணப்பதாரிகளின் முதற் தடவையாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேறு கருத்தில் கொள்ளப்படும். விசேட சித்திக்கு 4 புள்ளிகளும், அதிதிறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 1 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்த புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 8 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி/ விளையாட்டுத் தகைமைகள் மற்றும் க. பொ. த. (சா. த.) பெறுபேற்றின் அடிப்படையிலான புள்ளிகள் சமனாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு மாவட்டத்தினதும் 'Z' புள்ளி ஒழுங்கில் தெரிவுசெய்யப்படும்.*

*3.4.3 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்ற போதிலும், சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் க. பொ. த. (உயர் தரம்) பயின்ற மாணவர்களில் இருந்து ஆட்சேர்க்கப்படும்.*

*3.4.4 சித்திரம்/சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய வருடத்தில் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உரிய பாடத்தில் பெற்றுக்கொண்ட தரத்தின் அடிப்படையில் பின்வருமாறு மேலதிக புள்ளி வழங்கப்படும் :-*

| | |
|---|---|
| A சித்திக்கு | - 0.5 புள்ளிகள் |
| B சித்திக்கு | - 0.3 புள்ளிகள் |
| C சித்திக்கு | - 0.2 புள்ளிகள் |
| S சித்திக்கு | - 0.1 புள்ளிகள் |

*3.5 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி/தொழில் சான்றிதழ்களதும் செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.*

*4. **கல்வித் தகைமைகளும் வேறு விசேட தகைமைகளும்**.- தேசிய கல்விக் கல்லூரிகளில் உள்ள ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் பொருத்தமான கல்வித்தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும் பின்வருமாறு :*

*4.1 **பாடநெறி இலக்கம் 1** - ஆரம்பக்கல்வி - (சிங்களம்)*
*ஆரம்பக் கல்வி - (தமிழ்)*

*4.1.1 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் சிங்களம்/ தமிழ் உட்பட இரண்டு பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல்.*

*அத்துடன்*

*4.1.2 சிங்களம்/தமிழ் மொழியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி உட்பட பிரதான 06 பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**கவனிக்க வேண்டியது :**

* ஆரம்பக் கல்வி தமிழ்மொழி மூலப் பாடநெறிக்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த மாவட்டங்களில் போதியளவு காணப்படாதவிடத்து கவனத்திற் கொள்ளப்படும் ஏனைய அம்சங்களுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியடைந்தவர்கள் கவனத்தில் கொள்ளப்படுவர்.

* தம்பதெனிய தேசிய கல்விக் கல்லூரிக்கு (சிங்கள மொழி மூலம் ஆரம்பக் கல்வி பாடநெறிக்கு விண்ணப்பிப்போர் ஏனைய தகைமைகளுடன் பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். தம்பதெனிய தேசிய கல்விக் கல்லூரிக்கு 60 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

* ஆரம்பக் கல்வி பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அப்பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் நியமனத் தினத்திலிருந்து ஆரம்பப் பிரிவு ஆசிரியராக அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கடமையாற்ற வேண்டும். இவ்வாறு சிங்கள மொழி மூலம் நியமனம் பெறும் நால்வரும் தமிழ் மொழி மூலம் நியமனம் பெறும் ஒருவரும் கொழும்பு ரிட்ஜே சிறுவர் வைத்தியசாலையில் தாபிக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்விப் பிரிவில் ஒரு வருட காலத்திற்கு சேவையாற்ற இணைக்கப்படுவர்.

4.2 **பாடநெறி இலக்கம் 02** - விஞ்ஞானம் - (சிங்களம்)
விஞ்ஞானம் - (தமிழ்)
விஞ்ஞானம் - (ஆங்கிலம்)

4.2.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தர பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் உயிரியல் பாடத்துடன் மேற்குறித்த இரண்டு பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

4.2.2 சிங்கள/தமிழ் மொழியில் சித்தி மற்றும் கணித பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது :**

விஞ்ஞானம் (ஆங்கில மொழிமூலம்) பாடநெறிக்காக :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.2.1 மற்றும் 4.2.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து ஆங்கில மொழி மூலம் க. பொ. த. (உ. த.) பயின்ற ஒவ்வொரு மாவட்டத்தினது விண்ணப்பதாரிகளில் 50% மும்,

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.2.1 மற்றும் 4.2.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து சிங்கள/தமிழ் மொழி மூலம் க. பொ. த. (உ.த.) பயின்ற ஒவ்வொரு மாவட்டத்தினது விண்ணப்பதாரிகளில் 50% மும் தேர்ந்தெடுக்கப்படுவர். (i) வகுதியில் போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் அவ்விடங்களுக்கான வெற்றிடங்கள், (ii) வகுதியின் கீழே தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிரப்பப்படும்.

4.3 பாடநெறி இலக்கம் 03 - கணிதம் (சிங்களம்)
கணிதம் (தமிழ்)
கணிதம் (ஆங்கிலம்)

4.3.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் கணித பாடவிதானத்திற்குரிய கணிதம், இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் ஆகிய ஒரு பாடத்துடன் மேற்கூறப்பட்ட இரண்டு பாடங்களில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

4.3.2 சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியுடன் விஞ்ஞானப் பாடத்திற்கு திறமைச்சித்தியுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியது** : கணிதம் (ஆங்கில மொழிமூலம்) பாடநெறிக்காக :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.3.1 மற்றும் 4.3.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து ஆங்கில மொழி மூலம் க. பொ. த. (உ. த.) பயின்ற ஒவ்வொரு மாவட்டத்தினது விண்ணப்பதாரிகளில் 50% மும்,

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.3.1 மற்றும் 4.3.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து சிங்கள/தமிழ் மொழி மூலம் க. பொ. த. (உ. த.) பயின்ற விண்ணப்பதாரிகளில் 50% மும் தேர்ந்தெடுக்கப்படும். (i) வகுதியில் அந்தந்த மாவட்டங்களில் போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் அவ்விடங்களுக்கான வெற்றிடங்கள், (ii) வகுதியின் கீழே தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிரப்பப்படும்.

4.5 ***பாடநெறி இலக்கம் 05*** – *பௌத்த சமயம்*

பௌத்த சமயப் பாடநெறிக்கு பௌத்த மதகுருமாரும்/பிக்குணிகளும் விண்ணப்பிக்கலாம்.

4.5.1 2012 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌத்த சமயம், பௌத்த நாகரீகம், பாலி, சிங்களம் ஆகியவற்றில் இரு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.5.2 பிராச்சீன, ஆரம்பப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பௌத்த மதகுருமாருக்கு மாத்திரம்)

4.5.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.5.4 சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.5 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், சிங்களம், பௌத்த சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்/சிங்கள மொழி, கணிதம், திரிபீடகம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் அடிப்படை பிரிவெனா இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்கவேண்டியது** : தெரிவு ஒழுங்கு முறை :

(அ) 4.5.1, 4.5.2, 4.5.3, 4.5.4, 4.5.5 உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.5.1, 4.5.2, 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.5.1, 4.5.3, 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.5.1, 4.5.4, 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(உ) 4.5.1, 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

4.6 ***பாடநெறி இலக்கம் 06*** - *இந்து சமயம்*

4.6.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் இந்து சமயம், இந்து நாகரீகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒரு பாடம் உட்பட எல்லாமாக மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.6.2 சைவ சித்தாந்த பண்டிதர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.6.3 சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.6.4 இளம் சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.6.5 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இந்து சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவேண்டியது**.- தெரிவு ஒழுங்கு முறை :

(அ) 4.6.1, 4.6.5 ஆகிய இரண்டு உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.6.1, 4.6.4, 4.6.5 ஆகிய மூன்று சான்றிதழ்களுடன் ஏனைய இரண்டு தகைமைகளில் ஒரு சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.6.1, 4.6.5 ஆகிய இரண்டுடன் ஏனைய மூன்று தகைமைகளில் ஏதாவதொரு சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.6.1, 4.6.5 சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்.

*4.7 **பாடநெறி இலக்கம் 07** – இஸ்லாம்*

*4.7.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அறபு ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*4.7.2 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையிலும், இறுதிப் பரீட்சையிலும் சகல பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள்.*

*4.7.3 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.*

*4.7.4 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.*

*4.7.5 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இஸ்லாம் சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

**கவனிக்கவேண்டியது**.- *தெரிவு ஒழுங்கு முறை :*

*(அ) 4.7.1, 4.7.2, 4.7.3, 4.7.4 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஆ) 4.7.1, 4.7.3, 4.7.4 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(இ) 4.7.1, 4.7.4 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஈ) 4.7.1 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*4.8 **பாடநெறி இலக்கம் 08** – கத்தோலிக்க திருமறை/கிறிஸ்தவம் (சிங்களம்)*
*கத்தோலிக்க திருமறை/கிறிஸ்தவம் (தமிழ்)*

*4.8.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.*

*அத்துடன்*

*சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கிறிஸ்தவ திருமறை/கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சாதாரண சித்தி அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கத்தோலிக்கம்/கிறிஸ்தவ சமயப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.*

*அத்துடன்*

*விண்ணப்பதாரி கத்தோலிக்க திருமறை/கிறிஸ்தவ திருமறை ஆசிரியராவதற்குத் தகைமை உடையவர் என கத்தோலிக்க மதத்தவர் கத்தோலிக்க மறை மாவட்ட ஆயரின் சான்றிதழைப் பெற்றிருப்பதோடு, கிறிஸ்தவர்களுக்காக தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*4.8.2 கத்தோலிக்க சமயத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் தெரிவுகள் பின்வரும் தகைமைகளுக்கமைய முன்னுரிமை ஒழுங்கின்படி நடைபெறும்.*

*4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான 4 வருடகால பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

*4.8.2.2 தேசிய குருத்துவக் கல்லூரியினால் நடத்தப்படும் மெய்யியல் பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

*4.8.2.3 இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் 3 வருட சமய கல்வி பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

*4.8.2.4 துறவியாவதற்கான சமயக் கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறியை* (Novitiate) *வெற்றிகரமாகத் தொடர்ந்து பூர்த்திசெய்த துறவற சபைத் தலைவரினால் அல்லது உரிய மறை மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ;*

*அல்லது*

4.8.2.5 தேசிய மறைக்கல்வி நடு நிலையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் (சமய ஆசிரியர்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அதாவது

மறையாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 3)
அல்லது
மறையாசிரியர் விசேட (சமய ஆசிரியர் 2)
அல்லது
மறையாசிரியர் சாதாரண (சமய ஆசிரியர் 1)
அல்லது

4.8.2.6 க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் கிறிஸ்தவ திருமறை/ கிறிஸ்தவம்/ கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

4.8.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்யும் ஒழுங்குமுறை கீழ் குறிப்பிடப்பட்டவாறு நடைபெறும் :-

4.8.3.1 பிலிமத்தலாவையில் உள்ள இலங்கை இறையியல் கல்லூரி டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.3.2 தேசிய கிறிஸ்தவ மன்றத்தினால் நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (மறை ஆசிரியர்) பெற்றிருத்தல்.

**கவனிக்கவேண்டியது**.- *2017 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருமறை/ கிறிஸ்தவ பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது 4.8.2 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அக்குனாஸ் உயர் கல்வி கல்லூரியினால் வழங்கப்பட்ட மூன்றாண்டு மறை பாடநெறிச் சான்றிதழ் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறை பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் என்பனவும் கருத்தில் கொள்ளப்படும்.

(i) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 85 வீதம் தெரிவின்போது 4.8.1 இன் கீழ் தகைமையுள்ள கத்தோலிக்க விண்ணப்பதாரிகளுள் 4.8.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள முன்னுரிமைப்படி தெரிவு இடம்பெறும். 85% கத்தோலிக்க விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கிறிஸ்தவ மத விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

(ii) 15 வீதமான வெற்றிடங்கள் மேலேயுள்ள 4.8.1 இன் கீழ் தகைமையுள்ள கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளுள் 4.8.3 இன் கீழ் தரப்பட்டுள்ள ஒழுங்கு முறைப்படி தெரிவு இடம்பெறும். 15 வீதமான கிறிஸ்தவ விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்கள் கத்தோலிக்க சமயத்தவர்களுக்கு வழங்கப்படும்.

(iii) அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரிகளுள் 40 வீதமானோர் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமாரிலிருந்து தெரிவுசெய்யப்படுவர். 40 வீதமான மதகுரு விண்ணப்பதாரிகள் இல்லையாயின் அவ்வெற்றிடம் ஏனைய விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

(iv) மதகுருமார் விண்ணப்பதாரிகளில் 2012 ஆம் வருடம் க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2011, 2010, 2009, 2008 மற்றும் 2007 ஆம் ஆண்டுக்கு தொடராக அண்மித்த வருடங்களைக் கருத்திற்கொண்டு க. பொ. த. (உ. த.) சித்தியடைந்த மதகுருமார்கள் விண்ணப்பதாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

4.9 **பாடநெறி இலக்கம் 9** – தாய் மொழி (சிங்களம்)

4.9.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்களப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.9.2 சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*4.10* ***பாடநெறி இலக்கம் 10*** *– தாய் மொழி (தமிழ்)*

*4.10.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் தமிழ் மொழி உட்பட 2 பாடங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். இதன்போது தமிழ் மொழியில் திறமைச் சித்தியெய்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*4.10.2 தமிழ் மொழிக்கு திறமைச் சித்தி மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.11* ***பாடநெறி இலக்கம் 11*** *– ஆங்கிலம்*

*4.11.1 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கிலம் (பொது ஆங்கிலம் அல்ல) உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன், சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் /லண்டன் க. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*4.11.2 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிதிறமைச் சித்தி (B)/ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் (C) தமிழ் அல்லது சிங்களமொழி, கணிதம் உட்பட பிரதான ஆறுபாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.*

**கவனிக்கவேண்டியது :**

(i) *தெரிவு செய்வதில் ஆங்கிலப் பயிற்சிநெறி தொடர்பில் அந்தந்த மாவட்டங்களில் மேலே 4.11.1 பிரிவில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இவர்கள் 6.1.2 பிரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.) இவர்கள் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியதில்லை. நேர்முகப்பரீட்சையில் தகைமைகள் நிரூபிக்கப்படல் வேண்டும். 4.11.2 பிரிவின் அடிப்படையில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.*

(ii) *4.11.1 இன் கீழ் தகுதிபெறுவோர் போதியளவில் இல்லாதவிடத்து மட்டும் 4.11.2 பிரிவில் தகுதி பெறுவோர் கருத்திற்கொள்ளப்படுவர். ஏதாவதொரு மாவட்டத்தில் 4.11.1 ஆம் பிரிவில் தகுதிபெறும், போதியளவில் இருப்பின் தேர்ச்சிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.*

*4.13* ***பாடநெறி இலக்கம் 13*** *– சித்திரம் (சிங்களம்)*
*சித்திரம் (தமிழ்)*

*4.13.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திரப் பாடம் உட்பட (03) மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

*4.13.2 சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் சித்திரம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.13.3 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திரம்/சித்திரமும் சிற்பமும் தொடர்பாக பெற்ற தரங்களுக்கமைய மேலதிகப் புள்ளிகள் 3.4.4 இல் குறிப்பிட்டதற்கமைய வழங்கப்படும்.*

*4.17* ***பாடநெறி இலக்கம் 17*** *– சங்கீதம் (கர்நாடகம்)*

*4.17.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ.த.) பரீட்சையில் கர்நாடக சங்கீதம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்காக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் கர்நாடக சங்கீதம் உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*4.17.2 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம் மற்றும் கர்நாடக சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*4.17.3 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்திற்காக பெற்றுள்ள தரத்தினடிப்படையில் மேலதிக புள்ளிகள் 3.4.4 இல் குறிப்பிட்டதற்கமைய வழங்கப்படும்.*

***கவனிக்கவேண்டியது**.- ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2012 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த தோட்டப் பகுதியில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அல்லாத இந்திய வம்சாவளித் தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வெற்றிடங்கள் காணப்படின் 2012 இல் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு (02) பாடங்களில் சித்திபெற்ற க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்தில் திறமைச்சித்தி பெற்றுள்ள பெருந்தோட்டத் துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.)*

*4.18 **பாடநெறி இலக்கம் 18** – மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) :*

*4.18.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*

*அத்துடன்*

*ஆங்கில மொழியில் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

*அல்லது*

*4.18.2 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*

*அத்துடன்*

*ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

*அத்துடன்*

*கல்வியியல் நிறுவக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பாக ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல். (செயற்பாடு மற்றும் பிரயோக ரீதியில்)*

*அல்லது*

*க. பொ. த. (உ. த.) மேற்கத்தேய சங்கீதப் பாடம் மேலதிக பாடமாக சித்தியடைந்திருக்க வேண்டும்.*

***கவனிக்க வேண்டியது** :*

(i) *மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்தை பெற்றிருத்தல் ;*

(ii) *அப்பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கும்போது மேற்கூறப்பட்ட 4.18.1 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*4.20 **பாடநெறி இலக்கம் 20 -** உடற்கல்வி (சிங்களம்)*
*உடற்கல்வி (தமிழ்)*
*உடற்கல்வி (ஆங்கிலம்)*

*4.20.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*அத்துடன்*

*4.20.2 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

4.20.3 அங்கீகரிக்கப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். வேறுபட்ட விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது செயற்பாடுகள் மூன்றுக்கு ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் பின்வரும் ஒழுங்குமுறைக்கு அமைய வழங்கப்படும்.

**முன்னுரிமையடிப்படையில் விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகளின் தொடர்**

| தொடர் இல. | மட்டம் | தனி | குழு | இடம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சர்வதேச மட்டம் | தனி | - | 1 | 25 |
| 2 | சர்வதேச மட்டம் | தனி | - | 2 | 24 |
| 3 | சர்வதேச மட்டம் | தனி | - | 3 | 23 |
| 4 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 22 |
| 5 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 21 |
| 6 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 20 |
| 7 | சர்வதேச தேசிய பிரதிநிதி | தனி | குழு | - | 19 |
| 8 | தேசிய மட்டம் | தனி | - | 1 | 18 |
| 9 | தேசிய மட்டம் | தனி | - | 2 | 17 |
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 3 | 16 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 15 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 14 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 13 |
| 14 | மாகாண மட்டம் | தனி | - | 1 | 12 |
| 15 | மாகாண மட்டம் | தனி | - | 2 | 11 |
| 16 | மாகாண மட்டம் | தனி | - | 3 | 10 |
| 17 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 9 |
| 18 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 8 |
| 19 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 7 |
| 20 | ரெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 1 | - | - | - | 6 |
| 21 | சனாதிபதி சாரணியமும், பெண் சாரணியமும் | - | - | - | 6 |
| 22 | சார்ஜன்ட் மேஜர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2 | - | - | - | 5 |
| 23 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 1 | 6 |
| 24 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 2 | 5 |
| 25 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 3 | 4 |
| 26 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 1 | 3 |
| 27 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 2 | 2 |
| 28 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 3 | 1 |

4.20.4 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்றிருப்பின் பெற்றுக்கொண்ட தரத்தின் அடிப்படையில் பின்வருமாறு மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும் :

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02
S சித்தி - 01

**கவனிக்கவேண்டியது :**

(i) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) - கல்வியமைச்சு/விளையாட்டு அமைச்சு அவற்றில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கூடாக (சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கை தேசிய குழுவினை அல்லது பாடசாலை விளையாட்டுக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருத்தல். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.)

(ii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி – கல்வியமைச்சு/விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

மாகாணக் கல்வியமைச்சு/மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்/மாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப்போட்டிகள்.

(iii) விளையாட்டு அமைச்சில் அல்லது கல்வியமைச்சில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களினூடாக ஒழுங்குசெய்யப்பட்ட "A" தரத்திலான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முன்னதான ஐந்து வருடங்களில் பெறப்பட்ட விளையாட்டு தேர்ச்சிகள் செல்லுபடியாகும்.

(v) விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றுக்கு புள்ளி வழங்கும்போது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வயது மட்டத்தில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதிகூடிய ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

4.21 **பாடநெறி இலக்கம் 21** - மனைப் பொருளியல் (சிங்களம்)
மனைப் பொருளியல் (தமிழ்)

4.21.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

4.21.2 விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.22 **பாடநெறி இலக்கம் 22** – விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்)
விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்)

4.22.1 2012 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் விவசாயம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட பிதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.22.2 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் விவசாயம்/விவசாய தொழில்நுட்பவியல் / உயிரியல் - வள தொழில்நுட்பம்/உணவு தொழில்நுட்பம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

கணிதம், விஞ்ஞானம் மற்றும் விவசாயம்/விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்கவேண்டியது**.- தெரிவிற்கான முன்னுரிமை ஒழுங்கு :

(அ) 4.22.1 தகைமையும் அரச அங்கீகாரம் பெற்ற விவசாயக் கல்லூரியொன்றில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட கால விவசாயப் பாடநெறியொன்றினைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள் ;
(ஆ) 4.22.1 தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ;
(இ) 4.22.2 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.

4.23 **பாடநெறி இலக்கம் 23** – தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (சிங்களம்)
தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (தமிழ்)

4.23.1 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

*4.23.2 கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி, கலையும் கைப்பணியும்/கலாசிற்பம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*4.23.3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி/தேசிய தொழில் பயிலுநர் சபை/தொழிற்பயிற்சி அதிகார சபை/நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின்கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற அடைவு மட்டங்கள் காட்டப்பட்ட முறையான சான்றிதழுடன் கூடிய 10 மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக்கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

**கவனிக்கவேண்டியவை :**

(i) *தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர்-*

(அ) *4.23.1, 4.23.2 மற்றும் 4.23.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்*

(ஆ) *4.23.1, 4.23.2 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்*

*அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2011 மற்றும் 2010 ஆம் வருடங்களில் (அ) தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் தொடருக்கமைய கருத்திற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாகவும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மாத்திரம் மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் 2012, 2011, 2010 இல் தகைமை பெற்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்வதற்காக கருத்திற்கொள்ளப்படும்.*

(ii) *விண்ணப்பத்தில் 16.1 இன்படி விண்ணப்பிக்கும் பாடநெறி, கலையும் கைப்பணியும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.*

(iii) *விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக சகல தகைமைகளும் பெற்றிருத்தல் வேண்டும்.*

*4.24* ***பாடநெறி இலக்கம் 24*** *– வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)*
*வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் (தமிழ்)*

*4.24.1 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத் தொடருக்குரிய வன்பொருள் தொழில்நுட்பவியல், உள்ளீட்டுக்குரிய சிவில் தொழில்நுட்பவியல், இயந்திரோபகரண தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*4.24.2 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*4.24.3 கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழியுடன் நிர்மாணத் தொழில்நுட்பம்/இயந்திர தொழில்நுட்பம்/மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்/ஆக்கவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

*4.24.4 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி/தேசிய தொழில் பயிலுநர் சபை/தொழிற்பயிற்சி அதிகார சபை/நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின்கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற அடைவு மட்டங்கள் குறிக்கப்பட்ட முறையான சான்றிதழுடன் கூடிய 10 மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக்கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

**கவனிக்கவேண்டியவை :**

(i) *தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர்-*

(அ) *4.24.1 மற்றும் 4.24.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்*

(ஆ) *4.24.2, 4.24.3 மற்றும் 4.24.4 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்*

அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ), (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2011 மற்றும் 2010 ஆம் வருடங்களில் (அ) அல்லது (ஆ) தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் தொடருக்கமைய கருத்திற்கொள்ளப்படுவார்கள்.

* 2015 ஆம் வருடத்துக்காக தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் பாடநெறிக்காக 4.24.1 இன்கீழ் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 4.24.4 இன்கீழ் காட்டப்பட்டுள்ள பத்து மாதத்துக்கு குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

(ii) விண்ணப்பத்தில் 16.1 இன்படி விண்ணப்பிக்கும் பாடநெறி வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக சகல தகைமைகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

4.25 **பாடநெறி இலக்கம் 25** – தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) :

4.25.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உட்பட மூன்று (3) பாடங்களில் (தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உட்பட இரண்டு (2) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் பிரதான ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.25.2 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (3) பாடங்களில் (தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும்) இரண்டு (2) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் கணிதப் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்க வேண்டியது**.–

(i) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது அந்தந்த மாவட்டத்தில் 4.25.1 இன்படி தகைமைபெறும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இவர்கள் 6.2.1 பிரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.) இவர்கள் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. நேர்முகப் பரீட்சையின்போது தகைமைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 4.25.2 இன்படியான விண்ணப்பதாரிகள் இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ii) 4.25.1 இன்படி தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் போதியளவில் இல்லாத பட்சத்தில் மட்டும் 4.25.2 இன்படி தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் பற்றி கருத்திற்கொள்ளப்படும். ஏதாவதொரு மாவட்டத்தில் 4.25.1 இன்படி தகைமை பெற்றோர் இருப்பின் தேர்ச்சிப் பரீட்சையின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட மாட்டாது.

(iii) இந்தப் பரீட்சைப் பத்திரம் புறவய வகையான வினாக்களைக் கொண்ட 1 1/2 மணித்தியால வினாத்தாளாகும். இதன் மூலம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறியைத் தொடர்வதற்கு அவசியமென கருதப்படும் அடிப்படை கணித எண்ணக்கருக்கள் தொடர்பான விண்ணப்பதாரியின் தேர்ச்சி அளவிடப்படும்.

(iv) தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் ஏதாவதொன்று மூலம் தோற்ற முடியும்.

(v) தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு தோற்றும் மொழி விண்ணப்பப்படிவத்தில் 1.0 வாசகத்தில் (மொழி S/T/E பிரிவில்) குறிப்பிட வேண்டும்.

(vi) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் ஏனைய பாடங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். எனினும் அவர்களுக்கான பாடநெறி றுவன்புர தேசிய கல்விக் கல்லூரியில் நடைபெறும்.

*4.27 பாடநெறி இலக்கம் 27 – வணிகமும் கணக்கியலும் (சிங்களம்)
வணிகமும் கணக்கியலும் (தமிழ்)*

*4.27.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் வணிகப் பிரிவில் ஒரே அமர்வில் கணக்கியல் மற்றும் வணிகக் கல்வி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*4.27.2 வணிகமும் கணக்கியலும்/முயற்சியாண்மைக் கல்வி/கணிதம் எனும் மூன்று (03) பாடங்களில் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தி மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*4.30 பாடநெறி இலக்கம் 30 – இரண்டாம் மொழி (சிங்களம்)*

*4.30.1 இரண்டாம் மொழி சிங்களப் பாடநெறியின் விண்ணப்பதாரர்கள் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*

*அத்துடன்*

*4.30.2 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*

***(கவனத்திற் கொள்ள வேண்டியது**.- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க. பொ. த. (சா. த.) பரீட்சையின் இரண்டாம் மொழி தமிழ்ப் பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி உயர் பாடநெறி அல்லது விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்)*

*4.31 **பாடநெறி இலக்கம் 31** - இரண்டாம் மொழி (தமிழ்) :*

*4.31.1 இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறி விண்ணப்பதாரர்கள் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ்மொழிக்கு திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*

*மற்றும்*

*4.31.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

***(கவனத்திற் கொள்ள வேண்டியது**.- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்த அல்லது விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சித்தியடைந்த தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.)*

*4.32 பாடநெறி இலக்கம் 32 – விசேட கல்வி (சிங்களம்)
விசேட கல்வி (தமிழ்)*

*4.32.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;*

*அத்துடன்*

*4.32.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

***(கவனத்திற் கொள்ள வேண்டியது**.- இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சியின் பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய செவிடர், குருடர், மந்த புத்தி, ஓடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வேறு பலவீனங்கள் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படுவதற்கு கருத்திற்கொள்ளப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.*

*5.0 பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியல் கல்லூரிகள் அவற்றின் இலக்கத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன :-*

*(துயவு செய்து இப்பட்டியலை நன்கு வாசிக்கவும். நேர்முகப்பரீட்சையின்போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணினிப் பட்டியலை தயாரிக்கும்போது தங்களது விண்ணப்பம் கணினிப்படுத்தப்படுவது பாடநெறி இலக்கத்திற்கு அமையவே.*

சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற பின்பு அதில் மாற்றங்கள் செய்யப்பட மாட்டாது.) :-

(i) நிரல் - பாடநெறி இலக்கம்
(ii) நிரல் - பாடநெறியின் பெயர்
(iii) நிரல் - சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்
(iv) நிரல் - தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்
(v) நிரல் - ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்

(தேசிய கல்வியியல் கல்லூரிகள், அதன் இலக்கத்துடன் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.)

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| *(i)* | *(ii)* | *(iii)* | *(iv)* | *(v)* |
| 1 | ஆரம்பக்கல்வி | (2) நில்வலா<br>(4) சாரிபுத்த/தம்பதெனிய<br>(7) ஸ்ரீபாத<br>(11) புலதிஸிபுர<br>(12) வயம்ப<br>(13) ருவன்புர<br>(14) ருகுணு<br>(17) ஹாபிடிகம | (6) வவுனியா<br>(7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(9) மட்டக்களப்பு<br>(15) யாழ்ப்பாணம்<br>(16) தர்காநகர் | |
| 2 | விஞ்ஞானம் | (2) நில்வலா<br>(5) சியனை<br>(7) ஸ்ரீபாத | (6) வவுனியா<br>(7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(9) மட்டக்களப்பு<br>(15) யாழ்ப்பாணம் | (2) நில்வலா<br>(5) சியனை<br>(15) யாழ்ப்பாணம் |
| 3 | கணிதம் | (2) நில்வலா<br>(5) சியனை<br>(7) ஸ்ரீபாத | (7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(15) யாழ்ப்பாணம் | (2) நில்வலா<br>(5) சியனை<br>(15) யாழ்ப்பாணம் |
| 5 | பௌத்த சமயம் | (4) சாரிபுத்த | | |
| 6 | இந்து சமயம் | | (6) வவுனியா | |
| 7 | இஸ்லாம் | | (8) அட்டாளைச்சேனை | |
| 8 | றோமன் கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | (12) வயம்ப | (6) வவுனியா | |
| 9 | முதலாம் மொழி (சிங்களம்) | (18) பேராதெனிய | | |
| 10 | முதலாம் மொழி (தமிழ்) | | (7) ஸ்ரீபாத<br>(16) தர்காநகர்<br>(18) பேராதெனிய | |
| 11 | ஆங்கிலம் | | | (3) மகாவலி<br>(10) பஸ்துன்ரட்ட<br>(15) யாழ்ப்பாணம்<br>(18) பேராதெனிய |
| 13 | சித்திரம் | (12) வயம்ப | (9) மட்டக்களப்பு | |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| 17 | சங்கீதம் (கர்நாடகம்) | | (7) ஸ்ரீபாத<br>(9) மட்டக்களப்பு | |
| 18 | மேற்கத்தேய சங்கீதம் | | | (3) மகாவலி |
| 20 | உடற்கல்வி | (1) ஊவா | (6) வவுனியா | (1) ஊவா |
| 21 | மனைப் பொருளியல் | (14) ருகுணு | (16) தர்காநகர் | |
| 22 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | (11) புலதிஸிபுர | (6) வவுனியா | |
| 23 | தொழில்நுட்பக் கற்கை கலையும் கைப்பணியும் | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |
| 24 | வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |
| 25 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | | (13) ருவான்புர |
| 27 | வணிகமும் கணக்கியலும் | (19) மகரகம | (6) வவுனியா<br>(8) அட்டாளைச்சேனை | |
| 30 | இரண்டாம் மொழி (சிங்களம்) | (3) மகாவலி | | |
| 31 | இரண்டாம் மொழி (தமிழ்) | | (3) மகாவலி | |
| 32 | விசேட கல்வி | (17) ஹாபிடிகம | (8) அட்டாளைச்சேனை<br>(15) யாழ்ப்பாணம் | |

**கவனிக்க வேண்டியது :**

(i) தமிழ்மொழி மூலம் பாடநெறி நடத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பெண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

(ii) சங்கீதம் (கர்நாடகம்) பாடநெறி தமிழ் மொழிமூலம் மாத்திரம் நடைபெறும்.

(iii) மேலைத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் மாத்திரம் நடைபெறும்.

**6. 2014 ஆம் ஆண்டிற்காக பயிலுனர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைகள் :**

6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :

6.1.1 2017 ஆம் ஆண்டில் பாடசாலை முறைமைக்கு அமைவான ஆசிரியர் தேவையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

6.1.2 கத்தோலிக்க/கிறிஸ்தவ சமயம் சிங்கள மொழிமூலப் பாடநெறி மற்றும் உடற்கல்வி பயிற்சிநெறி தவிர்ந்த ஏனைய பயிற்சிநெறிகளுக்கு தெரிவுசெய்தல் உரிய விண்ணப்பதாரிகளின் மாவட்ட மட்ட 'Z' புள்ளி அடிப்படையில் இடம்பெறும். கத்தோலிக்க/கிறிஸ்தவ சமயம் சிங்கள மொழிமூலப் பாடநெறிக்குத் தெரிவுசெய்யும்போது ஒவ்வொரு மாவட்டங்களில் வாழும் கத்தோலிக்க சனத்தொகையினை அடிப்படையாகக் கொண்டு, உரிய மாவட்ட விண்ணப்பதாரிகளின் 'Z' புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்படும். உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது ஒவ்வொரு மாவட்ட விண்ணப்பதாரிகளின் விளையாட்டுத் தேர்ச்சி ஒழுங்கு முறையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும். ஆங்கில

பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது 4.11 பந்தியின் 4.11.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் போதியளவில் இல்லாவிடின் மாத்திரம் உரிய மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளின் தேர்ச்சிப் பரீட்சையின் புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவதுடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது 4.25.1 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் போதியளவில் இல்லாவிடில் உரிய மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளின் தேர்ச்சிப் பரீட்சைப் புள்ளி ஒழுங்குமுறையில் தெரிவுசெய்யப்படும். 'Z' புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில் ஒத்த புள்ளி பெற்ற பலர் இருப்பின், தேர்ச்சி/விளையாட்டுத் திறமையின் அடிப்படையில் ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படும்போது உரிய விண்ணப்பதாரிகளில் முதற் தடவையாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேறு கருத்தில் கொள்ளப்படும். விசேட சித்திக்கு 4 புள்ளிகளும், அதி திறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 1 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 8 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி/விளையாட்டுத் திறமை மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்றுக்கான புள்ளிகளின் அடிப்படையில் ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படும்போது அந்தந்த மாவட்டத்தினது விண்ணப்பதாரிகளின் 'Z' புள்ளி ஒழுங்கில் தெரிவு இடம்பெறும்.

6.1.2.1 2014 ஆம் ஆண்டிற்காக பயிலுனர்கள் தெரிவு பழைய புதிய பாடத்திட்டங்களுக்கு தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

6.1.3 உடற்கல்வி, விஞ்ஞானம், கணிதம், மேற்கத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலமும், ஆரம்பக் கல்வி சிங்களம்/தமிழ் மொழி மூலமும் கற்க விண்ணப்பிக்கும் ஒவ்வொரு மாவட்டத்தின் விண்ணப்பதாரர்களுக்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச்சித்தியும்/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியும், ஆங்கில பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் ஒவ்வொரு மாவட்டத்தின் விண்ணப்பதாரர்களுக்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி/ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருப்பதுடன், வணிகமும் கணக்கியலும் பாடநெறிக்கு ஒவ்வொரு மாவட்டத்தினதும் விண்ணப்பதாரிகள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் 'S' சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைவது அவசியமாகும்.

6.1.4 உடற்கல்வி, சங்கீதம் (கர்நாடகம்) மற்றும் மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் தகைமை தொடர்பாக திருப்திகரமான தேர்ச்சி மட்டத்தை அடைய வேண்டும்.

6.2 மாவட்ட அடிப்படை :

6.2.1 மாவட்டத்தை தீர்மானித்தல் :

6.2.1.1 ஏதாவதொரு பாடசாலை பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது முதலாவது தடவையில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னைய மாதம் வரை 05 வருடங்களில் கூடுதலான காலம் (2 1/2 வருடங்களுக்கு மேற்பட்ட) அவர் கற்ற பாடசாலை/பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.1.2 ஏதாவதொரு தனிப்பட்ட பரீட்சார்த்தி இதற்கு முன்னர் பாடசாலை பரீட்சார்த்தியாக முதற்தடவை க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையை விட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அப்பரீட்சார்த்தியின் மாவட்டம் முதற்தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.1.3 ஏதாவதொரு தனிப்பட்ட பரீட்சார்த்தி ஏதாவதொரு முறையில் பாடசாலை பரீட்சார்த்திக்காக க. பொ. த. (உ.த.) பரீட்சைக்கு தோற்ற முன்னர் பாடசாலையை விட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அப்பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது க. பொ. த. (உ.த.) பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றியதற்கு முன்னரான மாதத்தின் இறுதித் தினம் வரையுள்ள 05 வருடங்களில் கூடுதலான காலம் (2 1/2 வருடத்திற்கு மேற்பட்ட காலம்) கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.1.4 பாடசாலையில் கல்வி கற்காத தனிப்பட்ட பரீட்சார்த்தியாக இருப்பின் கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளரின் சத்தியக் கடதாசி அல்லது தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் மாத்திரம் மேற்குறிப்பிட்ட விண்ணப்பிக்கும் மாவட்டத்தின் வசிப்பிடத்தை உறுதிசெய்ய வேண்டும்.

6.2.1.5 அவ்வவ் கஷ்ட மாவட்டங்களுக்காக போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அண்மையிலுள்ள மாவட்டங்களிலிருந்து வெற்றிடம் நிரப்பப்படும்.

6.3 ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல் :

6.3.1 வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்கள் மூலமும் நிரப்பப்படும்.

6.3.1.1 தோட்டப் பாடசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களில் 35% மொனராகலை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாட்டவங்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

6.3.2 ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் சிங்கள மொழி மூலமும், ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், கர்நாடக சங்கீதம், முதலாம் மொழி (தமிழ்) ஆகிய பாடநெறிகள் தமிழ்மொழி மூலமும் நடாத்தப்படும். (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரியில் நடைபெறுவது மேலே குறிப்பிட்ட பாடநெறிகள் மட்டுமே).

6.3.3

6.3.3.1 ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத் துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும். சமகாலத்தே பெருந்தோட்டங்களில் சேவைபுரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கும் தற்போது தோட்டங்களில் வசிக்கும் பெருந்தோட்டத் துறையில் 25 வருடங்கள் சேவையாற்றிய பின் 2003–2012 ஆம் வருட காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அல்லது சுகவீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.3.2 6.3.3. 1 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் போதியளவில் காணப்படாவிடில் தோட்டப் பகுதிகளில் சேவை புரியாவிடினும் 2003 அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்டப் பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் தொடர்ந்து சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும். (2012, 2011, 2010 ஆகிய வருடங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.)

6.3.3.3 ஏதாவது தமிழ்மொழி மூலபாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமைபெறுகின்ற போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வதிகின்ற தோட்டப் பகுதிகளில் வேலை செய்யாத இந்திய வம்சாவளி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும்.

6.3.3.4 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும்.

6.3.3.5 தோட்டப் பகுதிகளில் வேலை செய்யாத பெருந்தோட்ட மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் மற்றும் வேறு மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் கட்டாயமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.3.3.6 சிங்கள மொழி மூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்ட மாவட்டங்களில் வதிந்துள்ள தோட்டப்பகுதி வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்களை ஏனைய தேசிய கல்விக் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து 'Z' புள்ளி அடிப்படையில் பூர்த்திசெய்யப்படும்.

6.3.4 அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் என உறுதிசெய்வதற்காக தோட்டப் பொறுப்பாளரின் கடிதம் (ஊழியர் சேவையாற்றிய கால எல்லையுடன்) 05 வருடங்கள் அல்லது அதனைவிட அதிகரித்த காலம் தோட்டங்களில் வேலை செய்கின்ற மற்றும் நிரந்தரமாக வதியக்கூடியவர் என/தோட்ட சேவையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற வருடம் மற்றும் திகதி தெளிவாக குறிப்பிடப்படுகின்ற, தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் அவசியமாகும். பயிற்சிக்குப் பின்னர் தோட்டப் பிரிவின் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கட்டாய சேவையாற்றுவதாக உறுதியளிக்கும் கடிதம் மற்றும் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு அறவிடுவதற்காக பதிவு இலக்கத்துடன் உறுதிசெய்யக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.5 உரிய சகல மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு விண்ணப்பதாரியேனும் தேர்ந்தெடுக்க கருத்திற்கொள்ளப்படும்.

**குறிப்பு**.- சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

**7. தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள் :**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். வெற்றிட எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். உரிய தினத்தில் முறையான அறிவித்தல் எதுவுமின்றி சமுகமளிக்காவிடின் அவ்வெற்றிடத்திற்கு அடுத்தவர் அழைக்கப்படுவதுடன் சமுகமளிக்காதோர் தொடர்பாக மீள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

7.2 சகல சான்றிதழ்களினதும் முதற்பிரதிகளை நேர்முகப் பரீட்சைத் தினத்திற்கு சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்துகொள்ள விண்ணப்பதாரர்களுக்கு இருக்கவேண்டிய உடல் உள பொருத்தப்பாடுகள் தொடர்பாக சிக்கலான நிலைமை காணப்படும் பட்சத்தில் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப் பரீட்சைச் சபை திருப்தியடையாத பட்சத்தில் விசேட நேர்முகப் பரீட்சைச் சபைக்கு உட்படுத்தி அதன் அறிக்கையை கல்வியியல் கல்லூரி சபைக்கு/கல்விச் செயலாளருக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

7.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய தேசிய கல்விக் கல்லூரியில் பதிவுசெய்வதற்குரிய தினம் தொடக்கம் 03 நாட்களுக்குள் பதிவுசெய்துகொள்ளாத பட்சத்தில் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர் இழக்கவேண்டி ஏற்படும். இதன் அடிப்படையில் ஏற்படக்கூடிய வெற்றிடம் அந்தந்த மாவட்டங்களின் தேர்ச்சி தொடருக்கமைய நிரப்பப்படும்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவுசெய்யாத விண்ணப்பதாரர்கள் பின்னர் மேற்கொள்ளும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

7.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் உள தேகாரோக்கியம் கொண்டவர் என பரிசீலனை செய்வதற்காக கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ள முன்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

7.6 ஏதாவதொரு பாடநெறிக்கு/தேசிய கல்விக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அப்பாடநெறி/தேசியக் கல்விக் கல்லூரியை மாற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. ஏதாவதொரு பாடநெறிக்கு போதியளவு மாணவர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் அண்மையில் உள்ள வேறு கல்விக் கல்லூரிக்கு உரிய பாடநெறியைத் தொடர அமர்த்தப்படுவர்.

**8. பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள் :**

8.1 ஏற்கனவே அரச அல்லது தனியார் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்

8.2 அரச பாடசாலையில் நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள்

8.3 தேசிய கல்விக் கல்லூரியில் பாடநெறியைத் தொடரும் அல்லது தொடர்ந்தவர்கள்

8.4 பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர்கல்வி நிறுவகம்/க. பொ. த. (உ. த.) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் பாடநெறிக்கு பதிவுசெய்துள்ள/தொடரும் அல்லது பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்திசெய்துள்ளோர். (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் பதிவு செய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு/அனுமதி பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர்.)

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் அடிப்படையில் தேசியக் கல்விக் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

**9.0 பயிற்சிக்கான நிபந்தனைகள் :**

9.1 பயிற்சிப் பாடநெறியின் காலஎல்லை 03 ஆண்டுகளாகும். இது தேசிய கல்விக் கல்லூரிகளில் 02 வருடங்கள் வதிவிடப் பயிற்சி பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்து ஒரு வருடகாலம் சேவைக்காலப் பயிற்சியும் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுனர்களின் சமுகமளிப்பு 90% ஐ விடக் குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல பயிலுனர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் தொடர்ச்சியான உள்ளகப் பரீட்சைகளிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழிமூல பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் ஆங்கிலமொழியில் சித்தியடைய வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டியது இந்நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள் மாத்திரம் ஆகும்.

9.3 பயிலுனர்கள் தங்கிப் பயிற்சி பெறும் 02 வருடங்களுக்குள் ஒரு வருடத்திற்கு 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூ. 2,500 பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். பயிற்சிக்கால அமர்வின்போது 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு 3,000 வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகளை பயிலுனர்கள் மேற்கொள்ளவேண்டும்.

9.4 பயிற்சிபெறும் காலத்திற்குள் பயிலுனர்கள் பல்கலைக்கழகம் ஒன்றில், பல்கலைக்கழக நிறுவகம் ஒன்றில், உயர்தர தகைமைகளுடன் சேர்த்துக்கொள்ளப்படும் ஏனைய நிறுவனமொன்றின் பாடநெறியில் உள்ளக மாணவராக கற்கைப் பாடநெறியைத் தொடர எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அல்லது உரிய மூன்று (03) வருடங்களைப் பூர்த்திசெய்யாது கைவிடும் பட்சத்தில் பயிலுனருக்காக செய்யப்பட்ட செலவினங்கள் அறவிடப்பட்ட பின்னர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

9.5 பயிற்சிபெறும் கால எல்லையில் பயிலுனர்கள் திருமணமாகும் பட்சத்தில் மாணவர் என்ற அந்தஸ்து இரத்தாகிறது. பயிற்சிக் காலத்தில் திருமணமானமை தெரியவந்ததன் பின்னர் விவாகரத்து செய்தாலும் பயிற்சியிலிருந்து விலக்கப்படுவர். தேரர்கள்/ மதகுருமார்கள் ஆகியோர் பதிவுசெய்ததன் பின்னர் சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொள்வதன் மூலமும் பாடநெறியிலிருந்து நீங்க வேண்டியேற்படும். பயிற்சியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய மதகுருமார்/ துறவிகள் தமது துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்றும் சுமார் 05 வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாகவும் கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும்.

9.6 பயிற்சிக் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள் உட்பட ஆர்வம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத பயிலுனர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் பயிற்சியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்போது திருப்திகரமான மட்டத்தை அடையத்தவறும் அல்லது 9.4 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியைத் தொடர்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியல் நிறுவக சபையின்/கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.7 பயிற்சிபெறும் கால எல்லைக்குள் பயிலுனர்களின் உடல் உள கட்டு பயிற்சி தொடர்பாக கூட்டுப்பயிற்சிக் கால எல்லைக்குள் பீடாதிபதியினாலோ அல்லது அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதன் அறிக்கை கல்வியியல் கல்லூரி நிறுவக சபைக்கு/கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.8 பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் பயிலுனர்களுக்கு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்கவேண்டிய பாட இணை செயற்பாடுகள் உட்பட) பயிற்சிக் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் இம்மதிப்பீடு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டுப் பிரிவாகும்.

9.9 இப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்படுவர்.

9.9.1 உடற்கல்வி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் கற்கும் பயிலுனர்கள் அவர்கள் நியமனம் பெறும் பாடசாலையில் ஆங்கில மொழி வெற்றிடம் இல்லாதபட்சத்தில் தமது தாய்மொழியான (சிங்களம்/ அல்லது தமிழ் மொழி மூலம்) கற்பிக்க வேண்டும்.

9.9.2 எதிர்காலத்தில் அரச பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது இப்பயிற்சிப் பாடநெறியை பூர்த்திசெய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனவே பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் பட்சத்தில் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

9.9.3 மேற்கூறப்பட்ட நிபந்தனையின்கீழ் பயிற்சிபெறும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக தாம் பயிலும் பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மேலும் ஆசிரியர் கல்வி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்திசெய்த பின் முதல் நியமனம் பெறும் மாவட்டத்தில் குறைந்தபட்சம் நியமனத் தினம் தொடக்கம் ஐந்து (05) வருடங்கள் கல்வி அமைச்சின்கீழ் சேவையாற்றுவதாக கல்வி அமைச்சின் செயலாளருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். இந்த ஐந்து (05) வருடங்களில் நியமனம் வழங்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவு எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

9.10 தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூ. 500,000 முறி மற்றும் உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட வேண்டும். பாடநெறியை இடைநடுவில் நிறுத்திவிட்டு அல்லது பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஐந்து (05) வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர் இம்முறியினதும் உடன்படிக்கையினதும்படியான முழுமையான நிதியை அரசிற்குச் செலுத்தும் நிபந்தனைக்கு உட்பட வேண்டும்.

9.11 கல்வி அமைச்சினால் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற தேசிய கல்விக் கல்லூரியை, வைத்திய/ தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு பயிலுனர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்விக் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெற மாட்டார்கள்.

9.12 சகல கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.

10. **விண்ணப்பித்தல் :**

10.1 விண்ணப்பதாரர் ஒருவர் உயர்ந்தபட்சம் 03 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிகள் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அதுவும் 02 பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்களுக்கு மற்றுமொரு பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். பௌத்த மதகுருமார் புத்த சமய பாடநெறிக்கும், கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மதகுருமார் குறித்த சமய பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

உ-ம் : விஞ்ஞானப் பாடநெறி தமிழ் மொழி மூலம் மற்றும் விஞ்ஞானப் பாடநெறி ஆங்கில மொழி மூலம் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

10.2 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தினை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்திருப்பின் சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். உடற்கல்வி, பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமயம், தொழில்நுட்பக் கற்கை-கலையும் கைப்பணியும், வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும், மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் மட்டும் ஒரு விண்ணப்பப்படிவத்துடன் அதில் உறுதி செய்யப்பட்ட 2 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரு கடிதவுறையிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

10.3 விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்க வேண்டும்.

10.4 விண்ணப்பப்படிவம் 2014.02.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி), கல்விக் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

(கீழ்வரும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடிதவுறையை தயாரிக்கவும்.)

"2014 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்".
முதலாவது விருப்பத்தைக் குறித்துக்காட்டும் பாடநெறி இலக்கம் ...................................... மொழிமூலம் ................................
ஸ்ரீபாத தேசிய கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளீர்களா? ஆம்/இல்லை
பழைய/புதிய பாடத்திட்டம்

பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி),
கல்விக் கல்லூரிக் கிளை,
கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.

(பரீட்சைத் திணைக்களத்திற்கு அல்லது தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பக்கூடாதென்பதை கவனத்திற் கொள்ளவும்.)

10.5 சகல விண்ணப்பதாரிகளும் தாம் அனுப்பிய விண்ணப்பத்தின் போட்டோப் பிரதியொன்றை கட்டாயம் தம்மிடம் வைத்திருக்க வேண்டும். கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக விளக்கங்கள் அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய பதிவுத்தபால் பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும். இதனால் அவற்றை விண்ணப்பதாரி தம்மிடம் வைத்துக்கொள்ள வேண்டும்.

10.6 பரீட்சை இலக்கம், வருடம், பாடநெறி இலக்கத்தை சரியாகக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

10.7 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது.

10.8 விண்ணப்பப்படிவத்துடன் வேறெந்தவொரு ஆவணத்தையும் இணைத்து அனுப்பக்கூடாது.

10.9 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ் மோசடி செய்யப்பட்ட சான்றிதழ் என பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரி சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அரச சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவார்.

11. வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வியியல் கல்லூரி நிறுவக சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12. வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவதொரு தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாகும்.

அநுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2014.01.17.

**விண்ணப்பப்படிவங்களை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்**

1. வர்த்தமானி அறிவித்தலை பல தடவைகள் கவனமாக வாசிக்கவும். தங்கள் தகைமைக்கேற்ப 03 பாடநெறிகளுக்கு மட்டும் ஒரு விண்ணப்பப்படிவம் விண்ணப்பிக்க தகுதியுடையதாகும். உடற்கல்வி, பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம், தொழில்நுட்பக் கற்கை-கலையும் கைப்பணியும், வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும், மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் மட்டும் ஒரு விண்ணப்பப்படிவத்துடன் உறுதி செய்யப்பட்ட அதன் 2 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரு கடிதவுறையிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும். (பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் சமாதான நீதவான் ஊடாகவும் 2 போட்டோப் பிரதிகளையும் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.)

2. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய (Legal) F5 அளவில் (சென்ரிமீற்றர் 21.8 x 33) வெள்ளைநிறக் கடதாசியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும். 1.0-9.5 வரை முதலாவது பக்கத்தில் உள்ளடங்கக்கூடியவாறு தயாரிக்கவும். கூட்டினுள் தகவல்களைக் குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிய கூட்டினுள் "X" இடுக.

3. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்காக அவ்வவ் பாடநெறிக்காக கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும் கணினி பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் பட்சத்தில் முதற்பக்கத்தில் 1.0-9.5 வரையான தகவல்களை உள்ளடக்க வேண்டுமென தயவாய் கருத்திற்கொள்ளவும். விசேடமாக பாடநெறி இலக்கம் 6.2.1 இலக்கத்தின் அடிப்படையில் மாவட்டம், க. பொ. த. (உ. த.) பரீட்சை இலக்கம் "Z" பெறுமதியை சரியானது என உறுதிசெய்யவும். ஓர் இலக்கத்திற்கு மேலால் வேறு இலக்கத்தை எழுதுதல் அல்லது தெளிவற்ற விதத்தில் குறிப்பிடுதல் உள்ளிட்ட பிழையான தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் தயவாய்க் கருத்திற்கொள்ளவும்.

4. உடற்கல்வி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 12.0 வாசகத்திலும், புத்தசமயம் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் 13.0 வாசகத்திலும் கத்தோலிக்க/கிறிஸ்தவ சமயப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 14.0 வாசகத்திலும், இந்து சமயம்/இஸ்லாம் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 15.0 வாசகத்திலும் தொழில்நுட்பக் கற்கை-கலையும் கைப்பணியும், வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் 16.0 வாசகத்திலும், மேற்கத்திய சங்கீதத்திற்காக 17.0 வாசகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கருத்திற்கொள்ளப்படும். இதனால் அவற்றை சரியாக நிரப்ப வேண்டும். இவற்றைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

5. **6.2 பந்திக்கமைய மாவட்டங்களுக்கான இலக்கங்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | அம்பாந்தோட்டை | 09 | அம்பாறை | 17 |
| கம்பஹா | 02 | யாழ்ப்பாணம் | 10 | புத்தளம் | 18 |
| களுத்துறை | 03 | கிளிநொச்சி | 11 | குருணாகல் | 19 |
| மாத்தளை | 04 | மன்னார் | 12 | அனுராதபுரம் | 20 |
| கண்டி | 05 | முல்லைத்தீவு | 13 | பொலன்றுவை | 21 |
| நுவரெலியா | 06 | வவுனியா | 14 | பதுளை | 22 |
| காலி | 07 | திருகோணமலை | 15 | மொனராகலை | 23 |
| மாத்தறை | 08 | மட்டக்களப்பு | 16 | கேகாலை | 24 |
| | | | | இரத்தினபுரி | 25 |

6. மொழிக்காக உரிய குறியீட்டைக் குறிப்பிடுக : சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E

7. ஆங்கிலம் (பாடநெறி இலக்கம் 11) மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (பாடநெறி இலக்கம் 25) ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தின் 1.0 பந்தியில் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்ட பரீட்சை நிலையங்கள் அமையவிருக்கும் நகரங்களின் பெயர்களும் அவற்றிற்கான இலக்கங்களும் தரப்பட்டுள்ளன :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | தங்காலை | 09 | அம்பாறை | 17 |
| கம்பஹா | 02 | யாழ்ப்பாணம் | 10 | புத்தளம் | 18 |
| களுத்துறை | 03 | கிளிநொச்சி | 11 | குருணாகல் | 19 |
| மாத்தளை | 04 | மன்னார் | 12 | அனுராதபுரம் | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்டி | 05 | முல்லைத்தீவு | 13 | பொலன்றுவை | 21 |
| நுவரெலியா | 06 | வவுனியா | 14 | பதுளை | 22 |
| காலி | 07 | திருகோணமலை | 15 | மொனராகலை | 23 |
| மாத்தறை | 08 | மட்டக்களப்பு | 16 | கேகாலை | 24 |
| | | | | இரத்தினபுரி | 25 |

உரிய மாவட்டத்தில் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் அண்மையிலுள்ள வேறு பிரதான நகரமொன்றிலுள்ள வேறு நிலையத்திற்கு அவ்விண்ணப்பதாரிகள் சேர்க்கப்படுவர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2014**

(விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவத்தை வர்த்தமானி அறிவித்தலின் 10.2 இற்கமைய முன்வைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் 9 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை முதலாவது பக்கத்தில் உள்ளடக்கவும். 1.0-9.5 வரையான தகவல்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக கணினிப் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படும்.)

1.0

| விருப்பத் தொடர் | பாடநெறியின் இலக்கம் | தே. க. கல்லூரியின் இல. | பாடநெறியின் மொழிமூலம் S/ T/ E | பாடநெறி இலக்கம் (25) மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (S/T/E) | 11/25 பரீட் சைக்குத் தோற்றும் நகர எண் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

2.0 2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) (In Block Letters) உ-ம் : MR. PERERA R. C :
Mr./ Miss :----.

2.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) (In Block Letters) :----.

3.0 நிரந்தர வதிவிட முகவரி :
(ஆங்கிலத்தில்) (In Block Letters) :----. தொலைபேசி இல. :----.

4.0 தமிழ்மொழி மூல வர்த்தமான அறிவித்தலில் 6.2.1 பந்திக்கமைய-

மாவட்டம் :----. மாவட்ட இலக்கம் : ☐

5.0 5.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.2 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 பால் (ஆண்/பெண்) : ஆண் 1 பெண் 2

7.0 இன வகை :

| சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்திய வம்சவாளி தமிழர் | முஸ்லிம் | ஏனையவை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

8.0 2012 ஆம் ஆண்டின் க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் : ☐ (1. புதிய பாடத்திட்டம்/2. பழைய பாடத்திட்டம்)

8.1 ஆண்டு : ☐☐☐☐ பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

8.2 பரீட்சை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐ பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் :----.

8.3 Z பெறுமதி : ☐ . ☐☐☐☐ Z பெறுமதி மறை ஆயின் குறித்த கூட்டில் M இலக்கத்தை குறிப்பிடவும். ☐

8.4 பெறுபேறு விபரம் பாடங்களுக்கமைய-

| பாடம் | பாட இல. | பெற்ற தரம் |
|---|---|---|
| 1. ............................... | ........................... | ........................... |
| 2. ............................... | ........................... | ........................... |
| 3. ............................... | ........................... | ........................... |

9.0 9.1 ஆங்கிலம் மற்றும் ஆங்கில மொழி பாடநெறிகளின் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அல்லது ஆங்கில இலக்கியத்திற்கு பெற்ற அதியுயர் பெறுபேறு :----. பாட இலக்கம் ☐

வருடம் : ☐☐☐☐

பரீட்சை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

9.2 தாங்கள் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றீரா? ஆம் [1] இல்லை [2]

9.3 ஆம் எனின் தாம் தோட்ட ஊழியரின் பிள்ளையா என்பது குறித்து (உரிய கூட்டினுள் x இடுக)

ஆம் [1] இல் லை [2]

9.4 உடற்கல்வி சிங்களம்/தமிழ் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணபப்படிவத்தில் 12.0 பிரிவுக்காக உள்ளடக்கப்படும் புள்ளிகளின் மொத்தம் ☐

9.5 9.5.1.1 இரண்டாம் மொழி (சிங்களம்) பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழிக்கு (தமிழ்) பெற்ற அதிஉயர் பெறுபேறு : ☐ பாட இலக்கம் ☐☐

9.5.1.2 இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழிக்கு (சிங்களம்) பெற்ற அதிஉயர் பெறுபேறு : ☐ பாட இலக்கம் ☐☐

10.0 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் தாங்கள் தோற்றியது ஒரு பாடத்திற்காயின் ஒவ்வொரு தடவையினதும் முழுமையான விபரங்களைக் குறிப்பிடுக :

| | 1 | 2 |
|---|---|---|
| 10.1 பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | ........................... | ........................... |
| 10.2 ஆண்டு | ........................... | ........................... |
| 10.3 பரீட்சை இலக்கம் | ........................... | ........................... |
| 10.4 பரீட்சை மத்திய நிலையத்தின் இல. | ........................... | ........................... |
| 10.5 Z புள்ளிகள் | | |
| 10.6 சித்தி எய்திய பாடங்கள் மற்றும் தரம் : | | |

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |

11.0 சித்தியடைந்த க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| 11.1 பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | ..................... | ..................... | ..................... |
| 11.2 வருடம் | ..................... | ..................... | ..................... |
| 11.3 பரீட்சை இலக்கம் | ..................... | ..................... | ..................... |
| 11.4 பரீட்சை மத்திய நிலையத்தின் இல. | ..................... | ..................... | ..................... |

11.5 சித்தி எய்திய பாடங்கள் மற்றும் தரம் :

| (தடவை 1) | | (தடவை 2) | | (தடவை 3) | |
|---|---|---|---|---|---|
| பாடம் | தரம் | பாடம் | தரம் | பாடம் | தரம் |
| 1. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 2. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 3. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 4. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 5. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 6. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 7. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 8. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |

12.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.20 வாசகத்தின் 4.20.3 மற்றும் 4.20.4 பிரிவுக்கமைய விளையாட்டுத் திறமை தொடர்பான விபரங்கள் (உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் நிரப்பவேண்டும்.) இப்பிரிவைப் பூரணப்படுத்தும்போது 4.20.3 இலுள்ள சகல பிரிவுகள் தொடர்பாகவும் தாங்கள் கவனத்தை செலுத்தவேண்டும். தாங்கள் பெற்றுள்ள உயரிய விளையாட்டுச் சான்றிதழ்கள் 03 இன் திறமைகளின் தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும். தாங்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றிருப்பின் 4.20.4 இற்கமைய தரத்திற்குரிய புள்ளியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் முதலாவது பக்கத்தில் 9.4 இல் உள்ளடக்க வேண்டும் :-

| தொ. இல. | ஆண்டு | வழங்கிய அமைச்சு/ நிறுவகம்/சங்கம் | போட்டியை பிரதிநிதித்துவப் படுத்திய மட்டம் சர்வதேசம்/ தேசிய/மாகாண/மாவட்ட/வலய | நிகழ்ச்சி/ போட்டி | பெற்ற இடம் | 4.20.3 இற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு சுகாதார மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குத்தோற்றியிருப்பின், | | | | | புள்ளிகள் | |
| மொத்தப் புள்ளி | | | | | | |

13. வர்த்தமானி அறிவித்தலின் 4.5 பிரிவின் (அ) இற்கமைய பிராச்சீன ஆரம்பம், பௌத்த சமயம், பிரிவெனா இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் உள்ளடக்கவும்.

| பரீட்சை | பிராச்சீன ஆரம்பம் | பௌத்த சமயம் | பிரிவெனா இறுதி | சமயப் பாடசாலை இறுதி |
|---|---|---|---|---|
| 13.1 ஆண்டு | | | | |
| 13.2 பரீட்சை இல. | | | | |
| 13.3 மத்திய நிலைய இல. | | | | |
| 13.4 பாட தரம் | 1<br>2<br>3<br>4 | 1<br>2<br>3<br>4<br>5<br>6 | 1<br>2<br>3<br>4<br>5<br>6<br>7<br>8<br>9<br>10<br>11 | |

*14.0* வர்த்தமானி அறிவித்தலின் 4.8 வாசகத்திற்கமைய கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களினால் உரிய பகுதி பூரணப்படுத்தப்பட வேண்டும்.

| பாடநெறியின்/தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | தரம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| *14.1* தேவதர்ம சாஸ்திரம் (BTH)<br>*14.2* தேசிய குருத்துவக் கல்லூரியின் கிறிஸ்தவ மெய்யியல் பாடநெறிச் சான்றிதழ்<br>*14.3* தேசிய குருத்துவக் கல்லூரியினால் நடாத்தப்படும் கத்தோலிக்க சமய ஆசிரிய சான்றிதழ் ஆசிரிய தராதரப் பத்திரம் (கத்தோலிக்கம்)<br>*14.4* இறையியல் கல்லூரி நடாத்தும் கத்தோலிக்க சமயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்<br>*14.5* துறவிகளுக்கான மறைக்கல்வி பயிற்சி பாடநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாக துறவி விடுதியின் பொறுப்பாளர்/ஆசிரியரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்<br>*14.6* தேசிய கிறிஸ்தவ சபையினால் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்<br>*14.7* பிலிமத்தலாவை சாஸ்திர நிலையத்தினால் நடாத்தப்படும் டிப்ளோமா தராதரப் பத்திரம்<br>*14.8* கத்தோலிக்க/கிறிஸ்தவ ஆசிரியராக எடுக்க பொருத்தமானவர் என கத்தோலிக்கர்களுக்கான ஆயர் பதவி சான்றிதழ்/கிறிஸ்தவர்களுக்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ்<br>*14.9* க. பொ. த. (உ.த.) கிறிஸ்தவ திருமறை/கிறிஸ்தவம்/ கிறிஸ்தவ நாகரிகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் | | | |

*15.0* வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள 4.6 மற்றும் 4.7 க்கு இணங்க இந்து சமயம்/இஸ்லாம் ஆகிய பாடநெறிக்கான விண்ணப்பதாரிகளால் கீழ்காணும் பகுதி நிரப்பப்படவேண்டும்.

| பாடநெறியின் பெயர் | கால அளவு | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

*16.0* வர்த்தமானி அறிவித்தலில் 4.23/4.24 பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்களால் கீழ்க்காணும் பகுதி பூர்த்தி செய்யப்படவேண்டும்.

*16.1* விண்ணப்பிப்பது கலையும் கைப்பணியும்/வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் என்பது :----.

*16.2* வர்த்தமானி அறிவித்தலின் 4.23.3/4.24.4 பகுதிக்கு அமைவாக தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும்/வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்டஅரசாங்க கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்பக் கற்கை பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருந்தால் நிரப்பப்படவேண்டியது-

| தொழில்நுட்ப பாடநெறியின் பெயர் | பதிவுசெய்த திகதியும் பதிவு இலக்கமும் | கல்விநிலையம் | பாடநெறியின் கால எல்லை | பாடநெறி திருப்திகரமாக பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா? |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

17.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.18.1, 4.18.2 வாசகங்களுக்கமைய மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்கான விண்ணப்பதாரர்கள் சங்கீதம் தொடர்பான திறனுக்குரிய தகவல்களை உள்ளடக்க வேண்டும் :

| ஆண்டு | சான்றிதழ் வழங்கிய நிறுவகம் | தரம்/சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

18.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(i) வர்த்தமானி அறிவித்தலின் 10.2 பகுதியில் குறிப்பிட்டமைக்கு ஏற்புடையதாக என்னால் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படுகிறது என்பதை நான் அறிவேன்.

(ii) என்னால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என உறுதிசெய்கிறேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென தெரிய வரும் பட்சத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட தகைமையற்றவர் என்றும் தேர்ந்தெடுத்ததன் பின்னர் பிழையான தகவல்கள் தெரியவரும் பட்சத்தில் எனது தெரிவை இரத்துச்செய்ய முடியும் என்பதனையும் நான் அறிந்துள்ளேன்.

(iii) நான் பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர் கல்வி நிறுவகத்தில் பதிவுசெய்யவில்லை என்றும் பாடநெறியைத் தொடரவில்லையென்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

19. **பாடசாலை/பிரிவெனா பரீட்சார்த்திகள் தொடர்பில் அதிபர்/பிரிவெனா பொறுப்பாளரின் உறுதியுரை** :
இவ்விண்ணப்பதாரி இப்பாடசாலையின்/பிரிவெனா மாணவராக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு/பிராச்சீன ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் விண்ணப்பதாரியினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியானது என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள பெறுபேற்று அடிப்படையில் ............................ ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் புதிய/பழைய பாடத்திட்டத்தில் விண்ணப்பதாரி பெற்றுள்ள இதன் "Z" புள்ளி .................................. (எழுத்தில்) ........................................................... என்றும் உறுதிசெய்கிறேன்.

----,
அதிபர்/பிரிவெனா தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

அதிபர்/பிரிவெனா பொறுப்புத் தேரரின் பெயர் :----.
பாடசாலை/பிரிவெனாவின் பெயர் மற்றும் முகவரி :----.
திகதி :----.

20. **தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தொடர்பான உறுதியுரை** :

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ பெறுபேற்றுக் குறிப்பிற்கமைய ................................ ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் புதிய/பழைய பாடத்திட்டத்தில் நான் பெற்ற "Z" புள்ளி ................................ (எழுத்தில்) ........................................................... என உறுதிசெய்கிறேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

----,
சமாதான நீதவானின் கையொப்பம்.
பெயர் :----.
பதவி :----.

திகதி :----.

1-935

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.